## ஆயுர்வேத மருத்துவத்தை மேம்படுத்த

# ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 18 - கடந்த 3 ஆண்டுகளில் ஆயுர்வேதத்தை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசு பரிசீலனை செய்துள்ளதா?இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

கடந்த 3 ஆண்டுகளில் பாரம்பரிய மருத்துவ சூத்திரங்களை மேம்படுத்தி,நோய்களை கட்டுப்படுத்த ஒன்றிய அரசால் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது ஆதரவு அளிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களின் எண்ணிக்கை என்ன?

கடந்த 3 ஆண்டுகளில் ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒன்றிய அரசால் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் (CCRAS) சார்பில் ஆராய்ச்சி மையங்கள்,கூட்டு திட்டங்கள், கள ஆராய்ச்சி அலகுகள் ஏதேனும் நிறுவப்பட்டுள்ள்தா? அல்லது அது குறித்து ஏதேனும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதா?

தருமபுரி நாடாளு மன்ற தொகுதியில் உள்ள தாவரங்களின் மருத்துவ குணங்கள் குறித்து அறிவியல் சரி பார்ப்பு,அது போன்ற புதுமையான ஆராய்ச்சியை ஊக்குவிக்க ஒன்றிய அரசால் கடந்த 3 ஆண்டுகளில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று ஆயுஷ் அமைச்சகத்தின் இணையமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்விடம் தருமபுரி நாடாளு மன்ற உறுப்பினர் ஆ. மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.

## வாக்குசாவடி முகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம்!

**மாவட்ட கழக செயலாளர் நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.அறிவிப்பு!**



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி,

**வாக்குசாவடி முகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம்**

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் வாக்குசாவடி முகவர்கள் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் கீழ்கண்ட அட்டவணை படி நடைபெறுகின்றது.

| வ. எண் | நாள் | நேரம் | ஒன்றியம், நகரம், பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| பூம்புகார் சட்டமன்ற தொகுதி | | | | |
| 1 | 18-03-2026 | காலை 10.00 மணி | செம்பனார்கோவில் வடக்கு, தெற்கு, மத்திய - ஒன்றியங்கள் சீர்காழி கிழக்கு - ஒன்றியம் தரங்கம்பாடி பேரூர். | PKC திருமண மண்டபம் செம்பனார்கோவில் |
| 2 | 18-03-2026 | மாலை 04.00 மணி | குத்தாலம் வடக்கு, கிழக்கு,மேற்கு - ஒன்றியங்கள் | PMS திருமண மண்டபம் ஸ்ரீகண்டபுரம் |
| சீர்காழி சட்டமன்ற தொகுதி | | | | |
| 3 | 19-03-2026 | காலை 10.00 மணி | சீர்காழி நகரம், சீர்காழி கிழக்கு, மேற்கு - ஒன்றியங்கள், செம்பை வடக்கு ஒன்றியம், வைத்தீஸ்வரன்கோவில் பேரூர். | இந்திரபவன் திருமண மண்டபம் வைத்தீஸ்வரன்கோவில் |
| 4 | 19-03-2026 | மாலை 04.00 மணி | கொள்ளிடம் கிழக்கு,மேற்கு - ஒன்றியங்கள். | அருண் பாலாஜி திருமண மண்டபம் - கொள்ளிடம் |
| மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதி | | | | |
| 5 | 20-03-2026 | காலை 10.00 மணி | மயிலாடுதுறை நகரம், மயிலாடுதுறை கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள், குத்தாலம் வடக்கு ஒன்றியம், குத்தாலம் பேரூர். | AJK மஹால் கணபதி நகர், மயிலாடுதுறை |
| 6 | 20-03-2026 | மாலை 04.00 மணி | மயிலாடுதுறை வடக்கு, மத்திய - ஒன்றியங்கள், மணல்மேடு பேரூர். | பத்மவாசன் திருமண மண்டபம் பல்லவராயன்பேட்டை |

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், இந்நாள்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி மன்ற தலைவர்கள், பாகநிலை முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் செயல் வீரர்கள் அனைவரும் அவரவர் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

**குறிப்பு:** ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்ட அறிவிப்பு குறித்த துண்டு பிரசுரம் அனைவருக்கும் கிடைக்க செய்து, கூட்டம் சிறப்பாக நடத்திட ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

**நிவேதா.எம்.முருகன் எம்.எல்.ஏ.**
மாவட்ட கழக செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.




கழகத் தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம் அவர்களின் மூத்த மருமகனும் கண்டோன்மெண்ட் போர்டு மன்ற முன்னாள் துணைத் தலைவருமான டி.நந்தகுமார் சகோதரருமான டி. ரவி இயற்கை எய்தினார் அன்னாரின் உடலுக்கு கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி. பாபு கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## இ.கண்ணப்பன் – பி.எஸ்.சந்துரு – வி.ஆர்.குப்பன் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி 16, 23, 23அ வட்டங்களில் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ பிரச்சாரம்!

## புழல் எம்.நாராயணன் பணிகளை துரிதப்படுத்தினார்!

மாதவரம், மார்ச்.18-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 16, 23,23 அ வட்டங்களில் நடைபெறும் வெல்லும் தமிழ் பெண்கள் பிரச்சாரத்தை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்தினார்.

மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் சடையங்குப்பம் மற்றும் பர்மா நகர் பகுதிகளில் வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் முன்னிலையில் வெல்லும் தமிழ் பெண்கள் வீடு வீடாக சென்று திராவிட மாடல அரசின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரங்களை வழங்கி வீடுகள் தோறும் ஸ்டிக்கர்கள் ஒட்டி வருகின்ற தேர்தலில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்க வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொண்டனர்.

அனைத்து வீடுகளிலும் தாய்மார்கள் எங்களது வாக்குகள் எல்லாம் உதய சூரியனுக்கு தான் என்று உறுதியளித்தனர். இந்த நிகழ்வில் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதி பா. சந்திரன், இ. வெங்கடேசன், என்.பரசுராமன், சி.முத்தையா, நைனியப்பன், மதி,சரண் உள்ளிட்ட மகளிர் நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் கலந்து கொண்டார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு பணிகளை துரிதப்படுத்தினார்.

23வது வட்டத்தில் காவாங்கரை மெர்சி நகர் பகுதியில் நடைபெற்ற வெல்லும் தமிழ் பெண்கள் நிகழ்வில் வட்டச் செயலாளர் பி. எஸ்.சந்துரு தலைமையில் வட்ட அவைத் தலைவர் டி.எழில் குமார் முன்னிலை யில் பகுதி மகளிர் அணி நிர்வாகி சகிலா மற்றும் மகளிர் அணியினர் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி கழகத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

23 அ வட்டத்தில் கண்ணப்பசாமி நகர், காவாங்கரை பகுதிகளில் நடைபெற்ற வெல்லும் தமிழ் பெண்கள் நிகழ்வுகளை வட்டச் செயலாளர் வி .ஆர். குப்பன் முன்னிலையில் கழக நிர்வாகிகள் பி. முத்துகிருஷ்ணன், ஆர். சுதா, எஸ்.கலைச்செல்வி, எம். அமுதா மற்றும் நிர்வாகிகள் நேரில் சென்று பார்வையிட்டு வீடு வீடாக திராவிட மாநகர அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி வாக்குகளை சேகரித்தனர்

இஸ்லாமிய சகோதரர்கள் நிறைந்த கே. எஸ். நகர் பகுதியில் உள்ள பொது மக்கள் இஸ்லாமிய சமுதாயத்திற்காக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்திருக்கிறார்கள்.

எனவே எங்களது வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிப்போம் என்று உறுதியளித்தனர். மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று பணிகளை துரிதப் படுத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை கே.டி. கூடலரசன்

**மார்ச் 18 (1999)**



**பள்ளிப் பருவத்திலேயே தி.மு.கழகப் பேச்சாளராக விளங்கியவர்.**

**இவர் அரசுப் பணியில் இருந்துகொண்டே கழகப் பிரச்சாரத்தை மேற்கொண்டதால், அன்றைய அரசால் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டவர். அப்படி நீக்கிய பின்னரும், அதற்காக வருந்தாது, மேலும் எழுச்சியுடன் கழக மேடைகள் தோறும் கொள்கை முரசம் செய்தவர்.**

**முரசொலி உள்ளிட்ட பல பத்திரிகைகளில் கட்டுரை எழுதி பெயர் பெற்றவர்.**

**தொ.மு.ச. அமைப்பில் பல்வேறு பொறுப்புகளை வகித்து, தொழிலாளர்களின் நலன் காக்க பாடுபட்ட இவர், சாலை விபத்தில் மரணமடைந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




# 14-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

**நாள் : 18.03.2026 புதன்கிழமை**



# மிசா A.சுப்பிரமணியன்

**முன்னாள் நகர செயலாளர்**
மு.பெருந்தலைவர் டான் சில்க், மு.தலைவர் முருகன் பட்டு கூட்டுறவு சங்கம்

நீங்கள் இமைமூடும் நேரத்தில் எங்களை விட்டு பிரிந்தாய்
நாங்கள் இருக்கும் வரை உன் நினைவில் தான் இருப்போம்...
என்றும் நீங்கா நினைவுகளுடன்...

**ஏ.எஸ்.முத்துசெல்வம்**
காஞ்சிபுரம் மாநகர துணை செயலாளர்
தலைவர் முருகன் பட்டு கூட்டுறவு சங்கம்